ISSN:2582-9599



# குண்டலகேசி உணர்த்தும் அறவாழ்வியல் சிந்தனைகள்

18

டோ.பியோ ராயன், இளங்கலை தமிழ்
காமராஜ் கல்லூரி, தூத்துக்குடி

**ஆய்வுச்சுருக்கம்**

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான பௌத்த காப்பியம் குண்டலகேசி இந்நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை வாழ்விற்குத் தேவையான அறசிந்தனைகளை எடுத்தியம்புவதாய் இந்நூல் அமைந்துள்ளது. அவற்றை இவ்வாய்வுக் கட்டுரையில் காண்போம்.

**முன்னுரை**

சமயவாதக் காப்பியமாக சைவஇ வைணவ சமயங்களை எதிர்க்கும் காப்பியம் குண்டலகேசி ஆகும். முழுமையாகக் கிடைக்கப் பெறாத இக்காப்பியத்தில் பத்தொன்பது செய்யுட்கள் மட்டுமே கிடைக்கப்பெற்றன. உரையாசிரியர்களால் மேற்கோள் காட்டப்படும் சிறப்பு இந்நூலுக்கு உள்ளது.

**கதைச் சுருக்கம்**

பத்திரை என்ற வணிகமகள், காளன் என்ற கள்வனை நேசிக்கிறாள். அரசனால் காவலில் வைக்கப்பட்டிருந்த அவனைத் தன் தந்தை உதவியால் மீட்டு மணந்து கொள்கிறாள். இருவரும் இனிதே வாழ்க்கையில்

**ஒருநாள் பத்திரை சினத்தால் கணவனைக் கள்வன் என்று திட்டவே அவன் அவளை வஞ்சகமாகக் கொல்லக் கருதி மலையுச்சிக்கு அழைத்துச் செல்கிறான் அங்கே அவள் தற்கொல்லியை முற்கொல்வன் என நினைத்துச் சாகுமுன் கணவனை மும்முறை வலம்வர விரும்புவதாக் கூறுகிறாள். அதற்கவன் இசையவே அவனை மலை முகட்டிலிருந்து கீழே தள்ளிக் கொள்கிறாள். பிறகு வாழ்வை வெறுத்த பத்திரை துறவு பூண்டு புத்தசமயம் சார்ந்து முத்தி பெறுகிறாள்.**

**(தமிழண்ணல் புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, ப.206)**

சுருண்ட கூந்தலையுடை பெண்ணின் கதையைக் கூறுவதால் குண்டலகேசி எனப்பெயர் பெறுகிறது. குண்டலகேசியின் மறுப்பு நூலாகக் கூறப்படும் நீலகேசியிலிருந்தே இக்கதையைத் தெரிந்து கொள்ள முடிகின்றது.

**புத்தரின் அறவாழ்வு**

கடவுள் மறுப்பு கொள்கையுடையவர்இ பௌத்தர். ஆனால் இந்நூலின் ஆசிரியர் பௌத்த சமய நிறுவனரான புத்தரைக் கடவுளாகப் பாவித்துஇ அவரின் திருவடிகளை வணங்கி தம் காப்பியத்தைத் தொடங்குகிறார்.

**"முன்றான் பெருமைக்க ணின்றாள்முடி வெய்து காறு நன்றேநினைந்தான் குணமேமொழிந் தான்ற னக்கென் றொன்றானு முள்ளான் பிறர்க்கேயுறு திக்குழந்தான் அன்றே யிறைவ னவன்றாள்சர ணாங்க ளன்றே"**

**(குண்டலகேசி - 1)**

புத்தர், தான் வீடுபேறு அடையுமளவும்இ பிற உயிர்களுக்கு நன்மை அடையும் வழியை ஆராய்ந்து

எடுத்துரைத்தார். **“தமக்கென முயலா நோன்தாள் பிறர்க்கென முயலுநர் உண்மையானே”**

**(புறம் 182)**

என்ற வரிகளுக்கேற்ப பிறருடைய நன்மைக்காகவே முயன்றவர். புத்தரின் இத்தகைய அறவாழ்வு குறித்தும் கடவுள் வாழ்த்துப் பாடல் எடுத்துரைக்கிறது.

**சொற்குற்றம் குற்றமாகா**

ஆசிரியர், தனது நூலில் ஏதேனும் பிழை இருப்பின் பொருத்தருள வேண்டும் முகமாய்இ பெரியவற்றை நாடுவோர் சிறியவற்றில் கவனம் செலுத்த மாட்டார் என்கிறார்.

**“நோய்க்குற்ற மாந்தர் மருந்தின்சுவை நோக்க கில்லார் தீக்குற்ற காதலுடையார்புகைத் தீமை யோரார்”**

**(குண்டலகேசி 2)**

அதுபோல புத்தனின் அறக்கருத்துக்களை அறிய விரும்பு இந்நூலைப் படிக்கும் சான்றோர்இ அறியாமை காரணமாகத் தன் வாய்க்கு இயல்பாக அமைந்த சொற்குற்றங்களைக் குற்றங்களாகக் கருதமாட்டார் என்கிறார்.

**அறம் வகுத்த நன்மை**

**“ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா**
**ஊக்கம் உடையான் உழை”**

**(குறள் 54)**

என்பது போல ஐம்பொறிகளால் அடையும் நன்மைகள், தீயஎண்ணம் சிறிதுமில்லாத தூய சான்றோனையே, தாம் அடைவதற்குரிய இடமாக எதிர்பார்க்கும் என்பதையே, “தீயவினை நோக்குமியல் சிந்தனையு மில்லாத் தூயவனை நோக்கியுள துப்புரலு மெல்லாம்”

என்ற வரிகள் எடுத்துதோதுகின்றன.

**தலையாய ஒழுக்கம்**

காவிரி ஆடை கட்டியுள்ளோர், ஆடை உடுத்தாதோர், உடல் முழுவதும் சாம்பல் பூசியுள்ளோர். தீயினுள் இறங்குவோர், தம் மதத்தைச் சார்ந்தோர் இடும் பிச்சையை ஏற்றுத் திரிவோர், சடை வளர்த்தோர் போன்றோரை நாம் தவத்தில் சிறந்தோராகக் கருதுகின்றோம். ஆனால் இவை தவ ஒழுக்கம் ஆகா. **“போர்த்தலுடை நீக்குதல் பொடித்துகண் மெய்பூசல் கூர்த்தபனி யாற்றலும் குளித்தழலு ணிற்றல் சார்த்தரிடு பிச்சையர் சடைத்தலைய ராதல் வார்த்தையிவை செய்தவ மடிந்தொழுக வென்றான்”**

**(குண்டலகேசி -4)**

என்ற பாடலின் வழி ஐம்புலன்களையும் அடக்கி ஆளுதலே தலையாய தவ ஒழுக்கம் என்கிறார் ஆசிரியர்.

**முள் எடுக்கும் முள்**

முள்ளை முள்ளால் தான் எடுக்க முடியும் என்பர். அதுபோல அளவிறந்த காமத்தைப் புணர்ச்சியாவே அகற்றுவோம் என்பது தீப்பற்றிக் கொண்ட காட்டை நெய் பெய்து அவிப்பது

போன்றது என்கிறார் ஆசிரியர். மேலும், **“அனவென நினைப்பிற் பொத்தி யகந்தலைக் கொண்ட காமக் கனவினை யுவர்ப்பு நீராற் கடையற வலித்து மென்னார் நினைவிலாப் புணர்ச்சி தன்னா னீக்குது மென்று நிற்பார் புனவினைப் புனவினாலே யாவர் போகாமை வைப்பார்”**

**(குண்டலகேசி - 6)**

என்ற பாடலின் வழி, இச்செயல் வெள்ளத்தை வெள்ளத்தாலே அணையிட்டுத் தடுப்பது போன்றது என்கிறார்.

**நிலையில்லா யாக்கை**

உடல் ஆரோக்கியமாக இருப்பதற்கும், அழகாக இருப்பதற்கும் பல முயற்சிகளை எடுக்கின்றோம். ஆனால் அத்தகைய உடம்பு நிலையற்றது என்பதை வலியுறுத்த ஆசிரியர், பல பாடல்களை இயற்றியுள்ளார். கூற்றுவனிடமிருந்து தப்ப யாரால் இயலும் எனக் கேட்கும் ஆசிரியர், அழியும் இயல்புடைய உடம்பு அழிந்ததற்காக நெஞ்சழிந்து வருந்துபவர், தேவையின்றி தம் கண்களை வருத்துவதாகக் கூறுகின்றார். மேலும்,

**“பாளையாந் தன்மை செத்தும் பாவனாந் தன்மை செத்தும் காளையாந் தன்மை செத்துங் காமுறு மிளமை செத்தும் மீளுமிவ் வியல்பு மின்னே மேலுரு மூப்புமாகி நாளுநாட்சாகின் றாமா னமக்குநா மழாத தென்னோ”**

**(குண்டலகேசி )**

என்ற பாடலின் வழி, நமது வாழ்நாளில் சிசு பருவத்திலிருந்து ஒவ்வொரு பருவமாகச் செத்து, அடுத்த பருவம் தோன்றுகிறது. அத்தகைய நம் சாவிற்கு அழாது அடுத்தவர் சாவிற்கு அழுதற்கான காரணத்தை வினவுகிறார்.

**“ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ மாநிலத்தீர்”**

**(நல்வழி - 10)**

என்ற நல்வழி பாடல் இங்கு ஒப்புநோக்கத் தக்கது.

**அரசநீதி**

மன்னன் உயிர்த்தே மலர்தவை உலகம். எனவே உலகத்தில் மன்னனே சிறந்தவன். அறத்தையே குறிக்கோளாகக் கொண்ட அரசன்இ இவ்வுலகில் தோன்றிய புத்தபெருமானை ஒத்தவனாவான் எனக் கூறும் ஆசிரியர்,

**“சீற்றஞ் செற்றுப்பொய் நீக்கிச்செங் கோலினாற் கூற்றங் காய்ந்து கொடுக்க வெனுந்துணை மாற்ற மேநவின் றாண்றடு மாற்றத்துத் தோற்றத் தன்னையுங் காமுறத் தோன்றினான்”**

**(குண்டலகேசி )**

என்ற பாடலின் வழி, மக்கள் வீடுபேற்றை விடுத்து, இவ்வுலகை விரும்புமாறு செய்ய ஒரு நேரிய மன்னனால் இயலும் என்கிறார்.

தீதும் நன்றும் பிறர் தரவரா

தவறு செய்வது மனிதனுக்கு மட்டும் உரியது அல்ல எனக் கூறுமிடத்துஇ சிவபெருமானது

கழுத்தின் கறையை எடுத்துரைக்கிறார் ஆசிரியர்.

**“வேரிக் கமழ்தா ராசன்விடு கென்ற போழ்தும் தாரித்த லாகா வகையாற்கொலை சூழ்;ந்த**
**பின்னும் பூரித்தல் வாடுதவென் றிவற்றாற்பொலி வின்றிநின்றான் பாரித்த**
**தெல்லாம் வினையின்பய னென்ன வல்லான்”**

என்ற பாடலின் வழி தனக்கு வரக்கூடிய அனைத்தும் பழவினைகளின் பயன்களே என உணர்ந்தோரால் மட்டுமே எல்லாக் காலத்தும் சமநிலையில் இருக்க முடியும் என்பதை அழகுபட எடுத்தியம்புகிறார். இதன்வழி ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவாரின் திறம் புலனாகிறது. இவர்தம் பாடல்களால் வருவது வந்தே தீரும் என்ற உலக வாழ்க்கை உறுதிபடுத்துகிறார்.

**முடிவுரை**

கிடைத்த 19 பாடல்களுமே அறக் கருத்துக்களை அள்ளி வீசுகின்ற பொழுதுஇ நூல் முழுவதும் கிடைத்திருப்பின் உலக மக்களை நல்வழிப்படுத்தும்இ சிறந்த காப்பியமாகக் குண்டலகேசி அமைந்திருக்கும் என்பதில் நூலளவும் ஐயமில்லை.

துணைநூல்கள்

குண்டலகேசி காப்பியம்
பொ.வே.சோமசுந்தரனார்
சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம்
சென்னை.
நல்வழி குறுந்தொகை
ந.மு. வேங்கடசாமி நாட்டார்
பாரி நிலையம்
சென்னை.